REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: மார்கழி 1உ திங்கள் (16—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 2உ செவ்வாய் (17—12—57) [இதழ் 158

ரஷ்யாவின் முதல் நிலவு: பிப்ரவரியில் அழிந்துபோகும்

மாஸ்கோ, டிச. 13—

கடந்த அக்டோபர் 4-ந் தேதியன்று வானவெளியில் சென்ற ரஷ்யாவின் முதல் செயற்கை நிலவு, இன்றுடன், 1,053 முறை உலகை வலம் வந்துள்ளதாகவும், மிகப் பயனுள்ள தகவல்களை அது ரஷ்ய விஞ்ஞானிகளுக்குத் தந்திருப்பதாகவும், 'ரெட் பிளீட்' என்ற ரஷ்ய பத்திரிகை ஒன்று தகவல் தந்திருக்கிறது.

இது, வரும் பிப்ரவரியில் அழிந்துபோய்விடக்கூடும் என, ஒரு ரஷ்ய விஞ்ஞானி தெரிவித்திருக்கிறார்.

ஆட்சி மொழிப் பிரச்சினை:

'தென்னாட்டவர் மிகக் கவலைப்படுகின்றனர்'

மத்திய அரசின் ஏற்பாட்டின் விளைவு

சென்னைக்கு ரூ. 245 இலட்சம் நஷ்டம் ஏற்படும்?

சென்னை, டிச. 16—

மில் துணி, சர்க்கரை, புகையிலை ஆகியவைமீது விதிக்கப்படும் விற்பனை வரி மூலம் இதுவரையில் மாநில அரசாங்கம், ரூ. 285 இலட்சம் வருமானம் பெற்றுவந்துள்ளது.

இப்போது மத்திய அரசாங்கம் இந்த மூன்று பொருள்களுக்கும் வரி விதிக்கும் உரிமையை மாநிலங்களிடமிருந்து தட்டிப்பறித்து 'சுங்க' வரி மட்டும் விதித்துள்ளது. இதன் காரணமாக சென்னை அரசாங்கத்திற்கு ரூ 40 இலட்சம் மட்டுமே கிடைக்கலாம் என்று சென்னை தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்,

இந்தப் பண்டங்களின் விலை குறையலாம் என்றும், வரி செலுத்தாமல் ஏய்ப்பவர்களின் எண்ணிக்கை குறையக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'மாநில அரசுகள் வாளாவிருக்க முடியாது'

'நான்கு மாநில அமைச்சர்களும் மாநாட்டில் சந்திக்க வேண்டும்'

மைசூர் முதல்வர் நிஜலிங்கப்பா அறைகூவல்

பெங்களூர், டிச. 15—

தென்னாட்டு மக்களின் உள்ளத்தைப் பெரிதும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிற பிரச்சினையாக உள்ளது, இன்று மொழிப் பிரச்சினை! மக்கள் மிகவும் உணர்ச்சிவயப்பட்டிருக்கின்றனர்! இந்த நேரத்தில் நாம், வாய்மூடிக் கிடக்க முடியாது; நமது கருத்தை தெளிவாக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

"எனவே, இந்த ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றி நான்கு தென்னாட்டு மாநிலங்களின் மந்திரிகளும், ஒன்றாக மாநாடு ஒன்றில்கூடி விவாதிக்க வேண்டியது அவசியமாகும்; அதற்காக இதுபற்றி ஏற்கனவே ஒரு முயற்சி இருக்கிறது; இடமும் நாளும்தான் குறிக்கப்படவில்லை"

என்று, மைசூர் மாநில முதன் மந்திரி எஸ். நிஜலிங்கப்பா அவர்கள், பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

உறுதிமொழி தரும் உத்தமர்தம் கவனத்திற்கு:

தீவிர இந்தித் திணிப்பு பற்றி அறிக்கை வேண்டுமாம்!

டெல்லி அமைச்சரவைகளுக்கு உள்நாட்டிலாகா தாக்கீது

புதுடில்லி, டிச. 15—

கடிதப் போக்குவரத்து, மற்றும் இதர அலுவல்களுக்கு இந்தியைத் தீவிரமாக உபயோகிப்பதில் பெற்றுவரும் முன்னேற்றம் குறித்து, டெல்லி சர்க்காரின் ஒவ்வொரு அமைச்சரவையும் மூன்று திங்களுக்கு ஒருமுறை அறிக்கை தரவேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறதாக. இர ...ட்டி...

உள்நா...ட் இலாகா, இந்த அறிக்கை தரவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக கூறப்படுகிறது.

மாநிலங்களுடனும் தொடர்பு கொள்ளும்போது, இந்தியில் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை பற்றியும தேசிய மொழியில், வேலைகளைச் செய்வதற்கான தேர்ச்சிபெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கையையும் தருமாறு உள்நாட்டிலாகா கேட்டிருக்கிறதாம்.

'ஆட்சி மொழிக்குழு' என்ற இந்தித் திணிப்புக் குழு நியமிக்கப்பட்டபோது, 'இந்தியை அரசாங்கக் காரியங்களுக்கு உபயோகிப்பது எப்படி என்பதைக் குழுவினர் கண்டறிந்து கூறுவர்; பின், அந்த அறிக்கையை மக்கள் சபைக் குழு பரிசீலிக்கும்; அதன் பிறகு குடியரசுத் தலைவர் இறுதி முடிவு செய்வார்; அதற்குப் பிறகே இந்தி அரசாங்க அலுவல்களுக்கு பயன்படுத்தப்படும்' என்று இதே டெல்லிசர்க்கார் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறியிருக்கின்றனர்; ஆனால், நடைமுறையிலோ; இந்தித் திணிப்பு தீவிரமாக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுவிடுதலைக்கு திட்டம் தாருங்கள்

ஜனநாயகப் பாதையில் போராட வாருங்கள்

பெரியாருக்கு அண்ணா வேண்டுகோள்

தனி நபர்கள்மீது பகைமை உணர்ச்சி திரும்பக்கூடாது

'பார்ப்பனீயம்' என்ற சொல் ஈரோட்டில் உற்பத்தியானதுதான்

பெரியாரின் அறிவாற்றல் நாட்டுக்குப் பயன்பட நாங்கள் பயன்படுவோம்

இராயப்பேட்டையில் அண்ணா கனிவுரை

சென்னை—இராயப்பேட்டை முத்தமிழ் முன்னேற்ற மன்றத்தின் சார்பில் 10—12—57-ல் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது:—

"காந்தியார் எப்படி தன் இயக்கத்தை நடத்திச்சென்றார் என்பதைக் கூர்ந்து கவனித்தால் தெரியும். அவர் ஒரு நல்ல வேதாந்தி; சிறந்த தத்துவஞானி; மதத்தின்பேரால் செல்வாக்குப் பெற்றவர். இதையெல்லாம்விட, அவர் உள்ளத்திலே—புதைந்திருந்தது இராஜதந்திரம். அவர், ஒரு சமயம், 'அன்னியர் துணிகளையெல்லாம் கொளுத்துங்கள்' என்று சொல்லுவார்; அடுத்த ஆண்டும் அதை செய்துகொண்டிருக்கச் சொல்லமாட்டார். அதை விட்டுவிட்டு, 'சுதேசித் துணியை எல்லோரும் நெய்யுங்கள்' என்பார்; அதன்பிறகு அதை விட்டுவிடுவார்; 'எல்லோரும் உப்புக் காய்ச்சுங்கள்' என்பார்; பிறகு உப்பு காய்ச்சுவதைவிட்டு, 'ஊராளும் சபையில் இடம் பிடிக்க வேண்டும்' என்பார்; அடுத்தபடியாக, 'கள்ளுக்கடை மறியல்' செய்யச் சொல்லுவார்; அடுத்த ஆண்டில், 'எல்லோரும் கடவுள் பக்தி கொள்ளுங்கள்' என்று பிரசாரம் செய்வார்; அவர் திட்டவட்டமாக, 'இதைத்தான் தொடர்ந்து செய்துகொண்டிருக்க வேண்டும்' என்று கட்டளையிடவில்லை. அடிக்கடி திட்டத்தை மாற்றிக்கொண்டே இருந்தார்; இதற்கென முன்கூட்டியே திட்டங்களை வகுத்துக்கொண்டிருந்தார். இதனால்தான் மிகக் குறுகிய காலத்தில் பாரத நாட்டிற்கு சுயராஜ்யம் கிடைத்தது.

"நாமும் நமது போர்முறையை வகுத்துக்கொள்ளவேண்டும். எது முதலில் செய்யவேண்டியது—எது இரண்டாவது செய்யவேண்டியது என்பதைத் திட்டவட்டமாக முன்கூட்டி வகுத்துக் கொள்ளவேண்டும்.

"அரசியல் வாழ்வு ரங்கராட்டினம்போல சுழன்றுகொண்டிருப்பதாக அமையக்கூடாது; ஒவ்வொரு கிளர்ச்சியும் முன்னேற்றத்திற்கு-புரட்சிக்கு ஒரு படிக்கட்டாக அமையவேண்டும்.

"ஆலயங்களில் அர்ச்சகன், 'ஆண்டவனுக்கு அபிஷேகம் எப்பொழுது செய்வது; ஆராதனை எப்பொழுது செய்வது' என்பதையறிந்துதான் செய்வான். ஆராதனையை முதலில் செய்துவிட்டு, பின்னர் அபிஷேகம் செய்யக்கூடாதா என்றால், செய்யலாம்; ஆனால், செய்யமாட்டான். அவனுக்குத் தெரியும்—'அபிஷேகத்துக்குப் பிறகு ஆண்டவனுக்கு ஆடை அணிந்து அலங்காரம் செய்தபின் ஆராதனை செய்தால்தான், இலட்சணமாக இருப்பார் ஆண்டவன்'—என்று!

"ஆலயங்களிலே அர்ச்சகன் எப்படி திட்டமிட்டுச் செய்கிறானோ, அதைப்போல, அரசியல் கட்சிகளும் முறைப்படி திட்டங்களைத் தீட்டிக்கொள்ளவேண்டும்; திட்டவட்டமான முறையில்லாததே தோல்விகளுக்குக் காரணமாகும்.

"திராவிட நாடு வேண்டும் என்று கேட்கிறோம்; இதில் நமக்கு யார் பகைவன்? நம் கண்ணோட்டமெல்லாம் அவன் மீது தான் இருக்கவேண்டுமே தவிர, வேறு பக்கம் திரும்பக்கூடாது. இதை நான் சொன்னால், 'ஓகோ, அண்ணாதுரை பிராமணர்களின் நண்பன; அதனால்தான் இப்படிச் சொல்லுகிறான்' என்று சொல்லுவார்கள்!

"பெரியாரவர்கள், எழும்பூரில் ஒரு கூட்டத்திலே பேசியபோது சொன்னாராம் — 'இதுவரையில் நமக்கு சாதி ஒழிப்பு வேலைதான் முதலாவதாக இருந்தது; இனி நாடு விடுதலை பெறச் செய்வது தான் முதல் வேலை; சாதி ஒழிப்பு வேலை இரண்டாவது தான்'—என்று!

"இதை அவர் சொல்லும்போது, ஏன் இப்படி தனது திட்டத்தை மாற்றிக்கொண்டார என்பதற்கான காரணத்தையும் கூறியிருக்கிறார்; காலையிலே காபி சாப்பிடும்போது 2 நண்பர்கள் பெரியாரிடம் வந்தார்களாம்; 'சாதி ஒழிப்புக்காக ஏன் ஐயா இப்படிப் போராட்டம் நடத்த வேண்டும்? நம் நாடு நமக்குக் கிடைத்துவிட்டால்—ஆட்சி நம்மதாகிவிட்டால் ஒரு வரியில் சட்டம் போட்டு சாதியை ஒழித்துவிடலாமே' என்று, பெரியாரிடம் சொன்னார்களாம்! உடனே, 'அவர்கள் சொல்வது சரிதான்' என்று பெரியார் மனதிலே பட்டதாம்!

"ஏன் அந்த நண்பர்கள் அப்படிச் சொன்னார்கள்? 'அப்படிச் சொன்ன இருவரில் ஒருவர், நான் அனுப்பிவைத்தவராகக்கூட இருக்கலாம்; என்னுடைய நண்பர்கள் எங்குமிருக்கக்கூடும்.

"அதே முறையில் பெரியாரவர்கள், இன்றைக்குத் தேவையான போர்த்திட்டத்தை வகுக்க வேண்டும். 'நம்முடைய எதிரியார்' என்பதைக் கவனிக்கவேண்டும். நம் பகைமை உணர்ச்சியைத் தனிப்பட்ட ஆட்களிடம் காட்டுவதா, ஒரு குறிப்பிட்ட கொள்கையிடத்திலே காட்டுவதா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். அதன் பிறகு நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்.

"மரத்தைப் பார்த்துக் கல்லெறிந்தால், பழம் விழுந்தாலும் விழும்; விழாமலும் போகும். 'பழம் எந்தக் கிளையிலிருக்கிறது—எதில் அடித்தால் பழம் விழும்' என்று குறிவைத்துக் கல்லெறிந்தால்தான் பழம் விழும். குறிவைக்காமல் கல்லெறிந்து கொண்டேயிருந்தால், அதில் அர்த்தமில்லை. தப்பித்தவறி இரண்டொரு பழங்கள் விழலாமே தவிர, பொதுவாக, கல்லெறிந்ததற்கு ஏற்ற பலனைக் காணமுடியாது.

"அதைப்போல போர்முறை வகுக்கப்பட வேண்டும். தனிப்பட்ட ஆளிடம் பகைமை உணர்ச்சி காட்டக்கூடாது.

"காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்றவகையில், நம் கருத்துக்களை ஆதரிக்கும் தனிப்பட்டவர்களையும் அணைத்துக்கொள்ளும் வகையிலே — அப்படிப்பட்டவர்களும் கலந்து கொள்ளும்படியான, அழகான போர்முறையை வகுக்க வேண்டும்.

"பெரியாரவர்கள் போர் முறைகளை வகுத்தாரென்றால், அவு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16—12—57 திங்கள்

சென்னை அரசாங்கம் செய்யுமா?

தமிழகத்தின் மூலத்தொழில் விவசாயம். அதற்கு அடுத்த நிலையில் இருந்துவருவது கைத்தறித் தொழிலேயாகும்.

விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களில் பலர் நெசவாளர்களும் உண்டு. கைத்தறித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து வருகின்ற மக்கள் தமிழகத்தில் ஏராளம்.

கைத்தறித் தொழில், நெசவாலைப் போட்டியை எதிர்த்து நிற்கமுடியாது. அதன் விளைவாகத்தான் கைத்தறித் தொழில், மெள்ள மெள்ள நசித்து வருகிறது.

கைத்தறித் தொழிலை, தொழில் என்ற முறையில் என்றென்றைக்கும் உயிரூட்டி வளர்த்து வருவது என்பது இயலாது என்ற உண்மையை அனைவரும் அறிவர். அத்தொழில், வேறு தொழிலற்ற நிலையில், பல இலட்சக்கணக்கானவர்களுக்குக்குறை வாழ்வளிக்கும் வாய்ப்பாகவாவது இருந்துவருகிறது என்பதினால் தான், கைத்தறித் தொழிலை எப்படியும் பாதுகாத்தே தீரவேண்டும் என்று, நம்போன்றவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ ஐந்து இலட்சம் கைத்தறிகள்தான் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசாங்கப் பதிவுக்குட்படாத தறிகள் மேலும் இரண்டு மூன்று இலட்சங்கள் இருக்கக்கூடும். இந்த மொத்தத் தறிகளில், அரசாங்கத்தின் கூட்டுறவு அமைப்பில் இணைந்து, பலவிதத்தலைப்பில் அரசாங்கத்தால் தரப்பட்டுவரும் பண உதவியைப் பெற்றுவரும் கைத்தறிகள் மிகமிகச் சொற்பமானவையாகும்.

கூட்டுறவு அமைப்பில் இணைந்துள்ள சொற்ப கைத்தறிகளுக்குத்தான், நம்மால் பெரும் உதவி செய்யப்பட்டுவருவதாகச் சொல்லிக்கொள்ளப்படும் உதவிகளை அரசாங்கம் செய்து வருகிறது. அரசாங்கத்தால் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முயற்சி மிகமிகக் குறைவானது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கேயாகும்.

கைத்தறிகளுக்குத் தேவையான நூலை காலாகாலத்தில் குறைந்த விலையில் விற்க வகை செய்வது, உற்பத்தி செய்யப்படுவதில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உடனுக்குடன் விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது போன்ற இன்றியமையா உதவிகளைத் தருவதில், அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்தி இருக்கும் பட்சத்தில், இடையிடையில் துவளவேண்டிய அவலநிலை அத்தொழிலுக்கு ஏற்பட்டே இருக்காது என்று கூடச் சொல்லலாம். நிற்க,

தமிழகத்தில் நூற்பு ஆலைகள்தான் அதிக[illegible] நெசவாலைகள் விரல்விட்டு [illegible]ணக்கூடியவைகளேயாகும்.

வடநாட்டில[illegible]ப்பு ஆலைகளும் உண்டு; [illegible]தாலும், அதன் எண்ணிக்[illegible]யைவிட நெசவாலைகளே மிகுதியாக உள்ளன.

எனவே, நமது கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுவரும் போட்டி, தமிழக ஆலைகளிலிருந்து ஏற்பட்டுவரும் போட்டி அல்ல. வடநாட்டு நெசவாளிகளின் மூலம் ஏற்பட்டுவரும் போட்டியேயாகும்.

நமது கைத்தறித் தொழிலில், உள்நாட்டில் செலவழியும துணி உற்பத்தியும், வெளிநாட்டில் மிகுதியாகவும் உள்நாட்டில் மிகக் குறைவாகவும் செலவழியும் துணியும் உற்பத்திச் செய்யப்பட்டு வருவது இடம் பெற்றுள்ளன. இதுவுமல்லாது, உயர்ந்த பட்டு செசவு வேறு இடம் பெற்று இருக்கிறது.

வெளிநாட்டு ஏற்றுமதியில் அப்பொழுதுக்கப்பொழுது ஏற்படுகின்ற தடைகளின் விளைவாக, வெளிநாட்டில் மிகுதியாகச் செலவழியும் துணியை மட்டுமே உற்பதகி செய்து வரும் நமது கைத்தறித்

ஒருசிலர் வசதியுடன் வாழ்கின்றனர்!

வறுமையால் உழல்கின்றனர் பலர்!

பெற்ற சுதந்தரத்தின் மதிப்பு பற்றி விநோபா பாவே

“இன்று நாட்டில் ஒருசிலர்தான் வாழ்க்கையின் நல்ல வசதிகளில் பெரும்பாலானவற்றை அனுபவிக்கின்றனர்; அதே நேரத்தில், பெரும்பாலானோர் வறுமையில் உழல்கின்றனர்!

“ஒருசிலர் எல்லா வசதிகளையும் உரிமைகளையும் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்; மற்றவர்கள் அவற்றினின்னும் தடுக்கப்பட்டுள்ளனர்; இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

“அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு நாம் சுதந்தரத்தைப் பெற்றபோதிலும், அச்சுதந்தரம் நம் மக்களில் பெரும்பாலோருக்கு இன்னும் கிடைக்கவில்லை”

என்று, ‘நமது சுதந்தரத்தின் மதிப்பு என்ன?’ என்ற தலைப்பில் ‘பூதான்’ இதழில், ஆச்சாரியா விநோபா பாவே குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கும் வரையில் நாட்டில் அமைதி நிலவாது என்றும், நமது முதல் வேலை, ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதே என்றும் அக்கட்டுரையில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனுக்குப் ‘பேரிடி’

சைப்ரஸ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமைவேண்டும்

ஐ. நா. அரசியல் குழு தீர்மானம்

நியூயார்க், டிச. 12—

சைப்ரஸ் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, அந்த நாட்டு மக்களுக்கு சுயநிர்ணய உரிமைவேண்டும் என்ற அடிப்படையை ஏற்க வேண்டும் என்று, ஐ. நா. சபையின் அரசியல் கமிட்டி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

இத்தனை நாளும் இந்த அடிப்படையை ஏற்க பிரிட்டன் மறுத்து வந்திருக்கிறது. தீர்மானத்தில், ‘சுயநிர்ணய உரிமை’ என்ற வார்த்தைகளை எடுத்துவிட வேண்டுமெனப் பிரிட்டனும், துருக்கியும் வாதிட்டுத் தோல்வியுற்றன.

‘இந்தத் தீர்மானம் பிரிட்டனுக்கு பெரியதோர் இடி’ என்று ஐ. நா. வட்டாரங்களில் வர்ணிக்கப்படுகிறது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 33 பேரும், எதிராக 20 பேரும் வாக்களித்திருக்கின்றனர்; 25 பேர் நடுநிலைமை வகித்திருக்கின்றனர்; இந்தியா, சைப்ரஸ் மக்களுக்கு இந்த விடுதலை கிடைக்கவேண்டுமென்பதை ஒப்பினும், தீர்மானத்தை ஆதரிக்க மறுத்துவிட்டிருக்கின்றது.

சைப்ரஸ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற அடிப்படையில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கிரேக்க நாடு கொண்டுவந்த தீர்மானத்தை ஐ. நா. அரசியல் குழு ஏற்றிருக்கிறது.’

துணி ஆலைகளுக்குத் கிடைத்த இலாபங்கள்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 14—

“பருத்தித் துணி ஆலைத் தொழிலை மொத்தமாகக் கவனித்தால் ஓராண்டில் அவைகளின் சராசரி நிகர இலாபம் அவைகளின் மொத்த உற்பத்தியில் சுமார் ஆறு சத விகிதம் அல்லது சுமார் ரூ. 25 கோடி முதல் ரூ. கோடிவரை இருக்கும்” என்று, அமைச்சர் மொரார்ஜி தேசாய், மக்கள் சபையில் தெரிவித்தார்.

ஆலைகள் சம்பாதித்த இலாபங்கள் பற்றிய துல்லியமான தகவல்கள் கிடைக்கவில்லையாம்.

‘1956-ம் ஆண்டுத் துவக்கத்தில் நடத்திவந்த மொத்தம் 412 துணி ஆலைகள் உள்ளது; 213 ஆலைகளுக்கு மொத்தம் சுமார் ரூ 20 கோடி இலாபம் கிடைத்தது; 23 ஆலைகளுக்கு மொத்தம் சுமார் ரூ. 2 கோடி நஷ்டம் ஏற்பட்டது என்றும் அமைச்சர் கூறினர்.

மாநிலங்கள் விதித்த விற்பனை வரி

இனி மத்திய சர்க்கார் ‘எக்சைஸ்’ வரியாக வசூலிக்கும்

சர்க்கரை புகையிலை ஆலைத் துணி முதலிய வரி இனங்கள் கைமாற்றம்

புதுடில்லி, டிச. 14—

சர்க்கரை, புகையிலை, மற்றும் ஆலைத் துணிகளுக்கு மாநிலங்கள் விதித்துவரும் விற்பனை வரிக்குப் பதிலாக மத்திய சர்க்கார், உபரி எக்சைஸ் வரி விதிக்கும் மசோதா ஒன்றினை, மக்கள் சபையில் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கொண்டுவந்தார்.

இந்த மசோதாவின்படி, வரி விதிப்பு இன்று நள்ளிரவு முதல் அமுலாகும்.

இதன் மூலம் இதுவரை மாநிலங்கள் இந்தப் பொருள்கள் மீது பெற்றுவந்த விற்பனை வரியைவிட ரூ. 7 கோடி வரை அதிகம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில், ஆண்டொன்றுக்கு இதன்மூலம் ரூ.41·45 கோடி கிடைக்கும என்றும, செலவு எல்லாம் போக ரூ. 38 அல்லது 39 கோடி வரை மிஞ்சும் என்றும், இது முன்பு வசூலானதைவிட ரூ. 7 கோடி வரை அதிகம் என்று கூறப்படுகிறது.

ஆனால், மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார், ரூ. 32 50 கோடி வரைதான் பங்கிட்டுத் தரச் சம்மதித்திருக்கிறதாம்.

வீரபாண்டியில் அச்சகம்

மக்கள் சபையில் தகவல்

கோவை அருகில், மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்படவிருக்கும் அச்சகம் வீரபாண்டி கிராமத்தில் அமைக்கப்படும் என்றும், இந்தக் கிராமம் பெரியநாயக்கன் பாளையம் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது என்றும், இந்த இடத்தில் வசதியாக சாலை, தண்ணீர், மின்சாரம் கிடைக்கிறது என்றும், மக்கள்சபையில் அமைச்சர் சந்தா தெரிவித்துள்ளார்.

சனதனிகளுக்கு மந்திரி ஜெகஜீவன்ராம் எச்சரிக்கை

‘காசி சலோ’ என நானே முழக்கமிடுவேன்

தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவைத் தடுக்காதீர்

“இங்கே கூடியிருக்கிற இளைஞர் முகத்தில் பளிச்சிடும் அர்

அதிக வரி இனங்களை தேடித் தரவேண்டுமாம்!

மக்கள் சபை உறுப்பினர்களை நிதி அமைச்சர் கேட்கிறார்

கழகச் செய்திகள்

புதிய நிர்வாகிகள் தேர்வு

ஆங்காங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள தி. மு. கழகக் கிளைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகிகள் விவரமும், பழைய கிளைகளுக்கான இடைத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகிகளின் விவரமும் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது:—

வடவழி:

கோவை மாவட்டம் வடவழி தி.மு.க. நிர்வாகிகள் விவரம்:-செயலாளர்: வி. ஏ. கந்தசாமி; துணைச் செயலாளர்: எஸ். கந்தசாமி; பொருளாளர்: வி. வி. நாராயணன்; செயற்குழு உறுப்பினர்கள்: கிருஷ்ணராஜ், பி. மருதாசலம், வி. ஏ. அய்யாவு, பி. சுப்பிரமணியம், வி. மருதப்பா, கே. நஞ்சப்பன், வி. எம். அங்கண்ணன், டி. குப்புசாமி, ஆர். இரங்கசாமி, ஜி. அங்கண்ணன், ரா. சுப்பிரமணியம், மு. பழனிச்சாமி.

கம்பாலாகில் — பம்பாய்:

தோழர் சு. நவயுவன் தலைமையில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: சு. நவயுவன்; துணைச்செயலாளர்: ஞா. சி. அன்பழகன்; பொருளாளர்: எஸ். எம். இராசகோபால்; பம்பாய் மத்தியக் குழு பிரதிநிதிகள்: நா. பா. அரங்கண்ணல், மி. சேவியர்; கணக்கு தணிக்கையாளர்: கை. சுப்பையா; செயற்குழுவினர்; நயா. இருசயம், எம். எஸ். பீற்றர், வி. எஸ். இராமச்சந்திரன், எஸ். கே. வெள்ளைச்சாமி, எம். மைக்கேல், எஸ். முத்தையா, கே. எம். அந்தோணி.

நடுவட்டம்—நீலகிரி:

தோழர் தே. நா. சுந்தரராசன் தலைமையில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: எஸ். ஏ. ஜியாவுதீன்; துணைச்செயலாளர்: தே. நா. சுந்தரராசன்; பொருளாளர்: வி கே. முனுசாமி; மாவட்டப் பிரதிநிதி: ஆர். கே. ஜி. பதி; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். ஏ. ஜியாவுதின், தே. நா. சுந்தரராசன், வி. கே. முனுசாமி ஆர். கே. ஜி. பதி, பொன்னுமுத்து, டி. ஏ. செயராசு, அய்யாதுரை, கே. எஸ். பி. தீன், சங்குரியன் குஞ்சு, சாமிக்கண்ணு கிருஷ்ணராசு, திருசீலன், ராசு, பால்பேட்ரிக், வேதபுரி மேஸ்திரி, சிதம்பர மேஸ்திரி.

உதகை:

தோழர் நா. சு. மு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: கு. பே. ஆறுமுகம்; துணைச்செயலாளர்: நா. சு. மு. ஆறுமுகம்; பொருளாளர்: பு. தொ. வரதராசன்; மாவட்டப் பிரதிநிதிகள்: பு.தொ. வரதராசன், த. நஞ்சுண்டன்; 12 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டால்தான் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும் என்று பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

சோமனூர்:

திரு. அருள் சேவியர் தலைமையில், கோவை மாவட்ட சோமனூர் தி. மு. கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: மு. இராமசாமி; துணைச் செயலாளர்: மு. சண்முகம்; பொருளாளர்: வையாபுரியப்பன்; மாவட்டப் பிரதிநிதி: அருள் சேவியர்; செயற்குழு உறுப்பினர்கள்: வரதராசு, ச. சண்முகம், வெ. இராமசாமி, அ. இராமசாமி, இருதயசாமி.

வெலிங்டன்—நீலகிரி:

தோழர் வி. கா. ஒளியழகன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்:—செயலாளர்: கே. காசீம்கான்; துணைச்செயலாளர்: அ. பொன்னழகன்; பொருளாளர், மாவட்டப்பிரதிநிதி: அமீர் அம்சா; 8 பேர் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மொங்கநல்லாம்பாளையம்:

தாரை வட்டம் கன்னிவாடிக் கிராமம் மொங்கநல்லாம்பாளையம் தி.மு. கழகச் செயற்குழு அமைப்புக் கூட்டம் திரு. கே. எஸ். எஸ். பெரியசாமி தலைமையில் நடைபெற்றது; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழக அமைப்பு என்பது பற்றியும், கொள்கையைப் பற்றியும் தெளிவாக்கியபின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: முத்துசாமி; துணைச் செயலாளர் ஆ. பி. வடிவேல்; பொருளாளர்: எம். கந்தசாமி; மாவட்டப் பிதிநிதி: எஸ். பி. வடிவேல்; செயற்குழு உறுப்பினர்கள்: ரா. ரங்கசாமி, செல்லமுத்து, சி. ராமசாமி, வெங்கிடுசாமி, எஸ். காளிமுத்து, பி. கந்தசாமி, ஏ. மாணிக்கம், என். சுப்பராயன், என். பொன்னுசாமி, கே. நாச்சிமுத்து, எம். திருமலைசாமி, பி. என். இராசு, டி. இராமலிங்கம், பி. மாணிக்கம்.

பெருமணநல்லூர்:

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம் பெருமணநல்லூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 18—11—57 இரவு 7-15 மணிக்கு தோழர் எஸ். முனியப்பன் தலைமையில் நடைபெற்றபோது கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: இரா. மு. இளஞ்செழியன்; துணைச்செயலாளர்: ஆ. இராமகிருட்டினன்; பொருளாளர்: பொ. ஏழுமலை; மாவட்டப் பிரதிநிதி: ப. பாண்டுரங்கம்; செயற்குழு உறுப்பினர்கள் 13 பேர்.

நிராகரிப்பு!

புதுடில்லி, டிச. 13—

"எவ்விதக் குறைப்புமின்றி திட்டத்தின் எல்லாப் பிரிவுகளையும் நிறைவேற்றுவதற்கு எல்லா எதிர்க்கட்சிகளையும் ஒன்றுகூட்டி ஆராயவேண்டும்" என்று மக்கள் சபையில் திருமதி ரேணுகா சக்ரவர்த்தி கொண்டுவந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

புற்றுநோய் நிலையத்துக்கு உதவி

புதுடில்லி, டிச. 13—

சென்னையில் மாதர் நிறுவனம் நடத்திவரும் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்திற்கு, மத்திய சர்க்காரால் ரூ. 2½ இலட்சம் உதவி மானியத்தொகை தரப்படுகிறது; அதில் ரூ. 1 இலட்சம் நடைமுறை செலவுக்கும், ரூ. 1½ இலட்சம் முதலீடு செலவுக்கும் தரப்படுகிறதாம்.

என். எஸ். இளங்கோ

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

காளையார்கோவில்:

18—11—57 மாலை 5-30 மணியளவில் காளையார்கோவில் தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் மு. சேகரன் தலைமை தாங்கினார். தோழர்கள் இரா. பொன்னுசாமி, வீரப்பன் ஆகியோர் பேசிய பின்னர் தோழர் என்.எஸ். இளங்கோ சொற்பொழிவாற்றினர்.

நாகப்பட்டினம்:

நாவலர் படிப்பகத் துவக்கவிழா

22—11—57 மாலை 6-மணியளவில் நாகப்பட்டினம் புதுத் தெருவில், திரு. யூசுப்சாகிப் மரைக்காயர் தலைமையில் மேற்படி துவக்க விழா நடைபெற்றது. ஒளி விளக்குகளால் மேடை மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தோழர் டி.எச். முஸ்தபா சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்; பின்னர், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் நாவலர் படிப்பகத்தைத் துவக்கிவைத்து சிறப்புரை வழங்கினர். படிப்பகப் பொறுப்பாளர் அப்துல்ஹமீது நன்றி கூறினர்.

பின்னர், தோழர் இளங்கோ அவர்கள் நகரின் பல பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பல படிப்பகங்களையும் பார்வையிட்டார்; அழகிரி மன்றம், மஜீது மன்றம், கே. வி. கே. சாமி படிப்பகம், அண்ணு படிப்பகம், பகுத்தறிவுப் படிப்பகம் முதலியன ஆற்றிவரும் பணியினைச் சிறப்பித்துப் பாராட்டினர். நகரச் செயலாளர் தோழர் கே. வி. ராமன் அவர்கள், இன்னும் நகரின் பல பகுதிகளிலும் படிப்பகங்கள் துவக்க ஆவன செய்துவருவதாகக் குறிப்பிட்டார்.

கோவை--இராமனுதபுரம்:

24—11—57 மாலை 6-மணியளவில் கோவை—இராமனுதபுரம் தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் அ. ஆறுமுகம் தலைமை தாங்கினர்; தோழர்கள் இராமலிங்கம், நகரச் செயலாளர் சே. அ. இராசமாணிக்கம், இராமனுதன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றிய பின்னர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் தி. மு. கழக இலட்சியங்களை விளக்கி சொற்பொழிவாற்றினர்; செயலாளர் நன்றி கூறினர்.

சின்னத்தம்பிபாளையம்:

28—11—57 மாலை 7-மணியளவில், திருச்செங்கோடு வட்டம் சின்னதம்பிபாளையம் தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் என். ஏ. நடேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். கே. பி. வேல், ஈரோடு அப்பாவு முதலியோர் பேசியபின்னர் தோழர் என். எஸ். இளங்கோ தி. மு. கழக இலட்சியங்களை விளக்கியும், இந்நிலையை எதிர்க்கவேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்; செயலாளர் சபாபதி நன்றி கூறினர்.

உணவு தானியங்கள்மீது அதிகமாகக் கடன்

பம்பாய், டிச. 14—

நாட்டில் உணவுத் தானியங்களின் விலை அதிகமாக இருந்துவருவதால், உணவுத் தானியத்தின் மீது 60 சத விகிதத்திற்கு அதிகமாகக் கடன் தரக்கூடாது என்று, பாங்கிகளுக்கு, ரிசர்வ் பாங்கி கட்டளை பிறப்பித்துள்ளது.

ஏமாற்றமடைந்தோரின் புதிய திட்டம்?

பம்பாய், டிச. 13—

பல்வேறு மாநிலங்களிலுமுள்ள காங்கிரஸ்மீது அதிருப்தி கொண்டுள்ளவர்கள் பம்பாயில் ஒரு மாநாடு நடத்தி, ஒரு அகில இந்திய அரசியல் கட்சியை உருவாக்குவார்கள் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

கவர்னர் செய்கைக்குக் கண்டனம்

சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு

புவனேஸ்வரம், டிச. 13—

அமைச்சர்களின் ஊதியம் ரூ. 500; துணை அமைச்சர்களின் ஊதியம் ரூ. 350 என்ற அளவில் குறைக்கும்படிக் கோரும் தனி நபர் தீர்மானத்தை ஒரிசா கவர்னர் நிராகரித்ததைக் கண்டித்து ஜார்கண்ட் கட்சியினர் தவிர மற்ற எல்லா எதிர்க் கட்சியினரும் ஒரிசா சட்ட மன்றத்திலிருந்து வெளியேறினர்.

'தலைவலி தரும் பிரச்சினை' பற்றி பண்டித நேரு

புதுடில்லி, டிச. 13—

கோவா பிரச்சினை பெரிய தலைவலியாகிவிட்டதென்றும் போர்ச்சுகீசியர் போக்கில் பழைமை தாண்டவமாடுகிறது என்றும், சுமூகமாகவே சிக்கலைத் தீர்க்க இந்தியா விரும்புகிறது என்றும், இராணுவ நடவடிக்கை எடுத்தால் இரண்டே நாட்களில் கோவாவைக் கைப்பற்ற முடியும் என்றும் மக்கள் சபையில் பண்டித நேரு கூறியுள்ளார்.

மறைவு

மன்னுடிமங்கலம் தி. மு. க. கிளையின் மாவட்டப் பிரதிநிதியும் ஊராட்சிமன்ற உறுப்பினருமான தோழர் கே. இராசாங்கம் அவர்களின் பாட்டி 120 வயதுக்கு மேற்பட்ட அழகம்மாள் அம்மையார் 5—12—57-ல் இயற்கையெய்தியமைக்கு மேற்படியூர் தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

சந்திரசேகரபுரம் தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் கோ. சம்பந்தம் 6-12-57-ல் இயற்கையெய்தியமைக்கு இவ்வூர் தி. மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

* * *

சென்னை 16-வது வட்டத் தோழர் சீதாபதியின் தந்தையார் 4—12—57-ல் இயற்கையெய்தியமைக்கு மேற்படி வட்ட தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

சென்னை-சூளை தோழியர் இராசம்மாள் சகோதரி பங்காரம்மாள்; தோழர் பாலகிருட்டினன் தாயார் முத்தாலம்மாள் ஆகியோர் இயற்கையெய்தியமைக்கு சூளை தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

சென்னை 27-வது வட்ட (எடப்பாளையம்) அறிவியக்கமன்ற செயலாளர் இராசன் அன்னையார் 1—12—57-ல் இயற்கையெய்தியமைக்கு மேற்படி மன்றச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இதொட்டில் தோழர் மணிவண்ணன் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

* * *

நெல்லிக்குப்பம் தோழர் எம். செல்வம் துணைவியார் பாமா அவர்கள் 26-11-57-ல் இயற்கையெய்தியமை குறித்து நெல்லிக்குப்பம் தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

வில்லிவாக்கம் தோழர் மு. சு. மணி அவர்களின் ஆண் மகவு இயற்கையெய்தியமைக்கு வில்லிவாக்கம் தி. மு. க. சார்பாக அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* * *

கீழமணக்குடி தி.மு.க. துணைச் செயலாளர் கவிய பெருமாள் தங்கை தனலட்சுமி 7-12-57-ல், இயற்கையெய்தியமைக்கு மேற்படியூர் தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்:

தமிழக அகதிகள்

ஐயா,

இலங்கையிலிருந்து விரட்டப்பட்டவர்கள் நாங்கள் சுமார் 45,000 பேர்கள்; எங்களில் சிலர் தவிர, ஏனைய பெரும் பகுதியினர்—சுமார் 40,000 பேர்கள் இங்கு வாழ முடியாமல் அகதிகள் நிலையிலேயே இருக்கின்றோம். நாங்களெல்லாம் இலங்கை அரசால் பயமுறுத்தப்பட்டு கெடுபிடியாக நாடு கடத்தப்பட்டபோது, எங்களிடம் தமிழகத்திற்குக் கொண்டுவர பணம் கிடையாது. ஏழைகளாகிய எங்கள் நிலைகண்டு இலங்கை அரசோ அல்லது எங்கள் உழைப்பை மூலதனமாகக்கொண்டு உயர்நிலை அடைந்த முதலாளிகளோ எதும் உதவவில்லை. எனவே, நாங்கள், சில பணக்காரர்களின் பதுக்கல் பணத்தை, 'எங்கள் உழைப்பின் சேமிப்பு' என்று நாணயக் கட்டுப்பாடு அதிகாரியிடம் கூறி, 'பர்மிட்' பெற்று, இங்கு வந்து அவர்களின் வீட்டில் கொடுத்து, ஏதோ சிறு தொகையை கமிஷனாகப் பெற்றவர்கள்; இந்த உண்மையை உணராத நேரு அவர்கள் பார்லிமெண்டில் எங்களையெல்லாம் 'பணக்காரர்கள்' என்று கூறிவிட்டார். சென்னை அரசாங்கமோ, 'தொழிற்சாலைகள் திறவுகிறோம்' என்று கூறிக் கொண்டே ஆண்டுகள் இரண்டை தட்டிக் கழித்துவிட்டது.

குறிப்பாக, நெல்லை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் பரந்து கிடக்கும் அகதிகளுக்கு ஏதோ ஓரிரு தொழிற்சாலைகளைக் கட்டி, குறைகளைப் பூர்த்தி செய்துவிடுவோம் என்பது முடியாத ஒன்று. அகதிகள் வாழ வேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்திருப்பின், நாங்கள் இங்கு வரும்போதே, கப்பலடியில் எங்கள் நிலையை ஆய்ந்தறிந்து, மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காவது உடனடி உதவி செய்திருக்கலாம். அதையும் செய்யத் தவறிவிட்டார்கள். எனவே, இனியும் சர்க்கார் காலந்தாழ்த்தாது அகதிகள் வாழ்வுக்குரிய தேவையை உணர்ந்து உடனே ஆவன செய்யவேண்டும்.

நெல்லையைச் சேர்ந்த அகதிகள் அவர்களுடைய தேவைகளை (நெல்லை மாவட்ட கடல் கடந்து தாயகம் திரும்பியோர் சங்க செயலாளரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்; அச்சங்கத்தின் மூலமாவது மனுக்களைப் பெற்று) பரிசீலித்து, அவர்கள் தேவைக்குரிய தொழிலுக்கோ, அன்றி விவசாயத்திற்கோ வேண்டிய பணத்தை வட்டியில்லா தநீண்டநாள் தவணை கடனாக சர்க்கார் கொடுத்துதவ உடனே முன் வரவேண்டும்.

பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவிய சென்னை சர்க்கார், சொந்த நாட்டு சகோதரர்களுக்கு இடுக்கண் வந்துள்ளபோது கவலைப்படாமல் இருப்பது என்? வடக்கு உங்களை வஞ்சிக்கிறதென்றால் பிரிவினை கோரியாவது தமிழர்கள் வாழ்வையும், அகதிகள் வாழ்வையும் சீரமையுங்களென்று சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பால. சிவந்திராசன்,
சென்னை-28.

அஞ்சுவதற்கு அவசியமில்லையாம்!

நேரு பண்டிதர் கூறுகிறார்

புதுடில்லி, டிச. 14—

"ரஷ்யா, சீனு, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளையும் கண்டு இந்தியா பயப்படுவதற்கு அவசியமில்லை; ரஷ்யாவுடனும், சீனுவுடனும், இந்தியாவுக்கு இராணுவ மோதுதல் எதுவும் கிடையாது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மேற்குநாடுகள் தவருகக் கருதிக் கொண்டுள்ளன" என்று பண்டித நேரு, மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

பெரியாருக்கு அண்ணு வேண்டுகோள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைய ஆற்றலுக்கும், அறிவுக்கும், திறமைக்கும் நல்ல பலன் கிடைக்கும்; அந்தப் போராட்டத்துக்கு நல்ல ஆயுதங்களாக நாங்கள் பயன்படுவோம்.

"நம் தலைவர் பெற வேண்டிய பலனை — வெற்றியைப் பெறவில்லையே என்ற கழிவிரக்கத்துடன் பேசுகிறேன்; சுற்றியிருந்து துதிபாடுபவர்களைப்போல நான் இதைச் சொல்லவில்லை. இயக்கத்திலே வெற்றிக்கு தடையாகஇருக்கின்ற இன்னல்கள், இடுக்கண்கள், தூசு—மாசுகள் துடைக்கப்பட வேண்டும்; அதுவே தலைவருக்கு நாம் செய்கின்ற கடமை—பெருமைதரவல்லது என்று நான் கருதுகிறேன்.

"புகழ்பாடுவதைக் கசப்பாகக் கருதியல்ல, நான் இதைச் சொல்வது; புகழ் பாடியவன்தான் நான்; இன்றைக்குப் பெரியாரிடத்திலேயுள்ளவர்கள் சொல்லும் புகழ்வார்த்தைகளில் பெரும்பாலானவை என்னுல் சொல்லப்பட்டவைதான்; நான் புதிது புதிதாகச் சொல்லிவந்த வார்த்தைகளைத்தான் இன்று அவர்களும் சொல்லிவருகிருர்கள். அவர்களாக ஒன்றும் புதிதாகச் சொல்லிவிடவில்லை.

"பெரியாரவர்களுடைய அறிவாற்றல் நாடடுக்குப் பயன் படத்தக்க வகையிலே போர் முறை தீட்டப்பட வேண்டும்; தனி நபர்களிடத்திலே பகை காட்டும் வகையிலே போராட்டம் அமைவதாக இருக்கக் கூடாது.

"நாம் அங்கு (தி. க.-வில்) இருந்தபோது அங்கே பார்ப்பனர்களுககு இடம் உண்டு; பரவஸ்து இராசகோபாலாச்சாரியார் என்னும் பார்ப்பனர் நம்மோடு இருந்து, இந்தியை எதிர்த்த போது, 'திராவிட நாட்டில் வாழும் பார்ப்பனர்களெல்லாம் திராவிடர்கள்தான்' என்ற முறையிலே பேசிவந்தோமே, நினைவிருக்கிறதா—என்று, திராவிடர் கழக நண்பர்களைக் கேட்கிறேன்.

"நாம் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறிய பிறகுதான், தனிப்பட்ட ஆட்கள மீது துவேஷம் காட்டும் கொள்கை திராவிடர் கழகத்திலே திணிககப்பட்டது.

"நாம் திராவிடர் கழகத்தில் இருந்த காலத்திலேயேதான், 'பார்ப்பனீயம்' என்ற சொல்லும் பிறந்தது; இன்று நமமைப் பார்த்து 'ஈயம்', 'பித்தளை' என்று கேலி—கிண்டல் செய்கிருர்கள், தி. க. தோழர்கள்! இந்த 'ஈயம்', நம்மால் உற்பத்தி செய்யப்பட்டதல்ல; ஈரோட்டு ஈயம்தான்! பார்ப்பனக் கொள்கைகளை யார் யார் கடைப்பிடிக்கிறார்களோ, அவர்களிடமெல்லாம், பார்ப்பனீயம் இருக்கிறது என்றுதான் பொருள்.

"பிரிட்டன் கொள்கைகளை எப்படி 'பிரிட்டானீயம்' என்று சொல்லப்படுகிறதோ, அதைப் போல, 'பார்ப்பனீயம்' என்று பார்ப்பனக் கொள்கைகளைச் சொல்லலாம்—என்று, பெரியார்தான் முன்பு சொன்னர்! 'தனிப்பட்ட பார்ப்பனர்களிடத்திலே நாம் பகைகொள்ளக் கூடாது; பார்ப்பனீயம்தான் நமக்குப் பகை' என்று, பெரியார் சொன்ன அந்தத் தூய நிலை வளர்ந்தால், காட்டுமிராண்டி என்ருே, கலகம் விளைவிப்பவர்கள் என்ருே சுலபத்தில் எவரும் நம்மைப் பார்த்துச் சொல்லிவிட முடியாது.

"பார்ப்பனீயம் என்பது பார்ப்பனர்களிடம் மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லமுடியாது; பாண்டுரங்கம் செட்டியாரிடமும் இருக்கிறது; பஞ்சாபிகேச சாஸ்திரியிடமும் இருக்கிறது. பஞ்சாபகேச சாஸ்திரியாவது கொஞ்சம் பயந்து பேசுவார்; பாண்டு ரங்கம் செட்டியாரோ, கிமிர்ந்தபடி பேசுவார் சாதி ஒழியக்கூடாது என்று!

"ஆகவேதான், தனிப்பட்ட ஆட்களிடம் வெறுப்பு காட்ட வேண்டாம் என்று பணிவன் புடன் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் கூட்டிப்பேசவேண்டு மென்று பெரியாரவர்கள் உள்ள படியே நினைத்தால், அதைவிட நல்ல காலம் தமிழ் நாட்டுககு வேறு ஒன்று இல்லை என்று தான் சொல்லுவேன். அப்படிப் பேசும்போது இந்த, எனது கருத்தைத்தான் வலியுறுத்திச் சொல்லுவேன்.

"நேரு பண்டிதர், நான் முதலில் சொன்ன அந்த இரண்டு பாதைக்குத்தான் பயப்படுவார். நாட்டு மக்களின் ஓட்டு நமக்கு இருக்கிறது; இதைத் தவிர வேறு என்ன செய்தாலும் நேரு பயப்படமாட்டார்.

"மூன்ருவது மாடியில் இருப்பவர் மீது கல்லெறிய வேண்டுமென்ருல், நாம் எங்கிருந்து கொண்டு கல்லை வீசினுல் படவேண்டியவர் மீது படும் என்பதை முதலில் பார்க்கவேண்டும். நாமும் அந்த உயரத்துக்கு—பக்கத்து மாடி மீது ஏறி நின்று கல் வீசினுல்தான் முடியும். அதைப்போல, நேருவை எதிர்க்க வேண்டுமென்ருல், நாம் அவரைச் சந்திக்குமிடம் சட்டசபைதான்.

"நாமும் ஓரளவு மாடிப்படி ஏறவேண்டும்—ஜனநாயகப் பயணத்தில் ஈடுபடவேண்டு மென்று பெரியார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"நான் திராவிடர் கழகத்திலிருந்தபோது, நான் கருப்புச் சட்டை போட்டுத்தாணுகவேண்டு மென்று பிடிவாதம் செய்தார்கள்; திருச்சியிலே நடந்த கமிட்டிக் கூட்டத்திலே—கருப்புச் சட்டை போட்டுக்கொண்டால்தான் பேசலாம் என்ருர்கள்; நானும் சரி என்றேன்—பேசவேண்டுமென்று எனக்கு ஆசையிருக்குமானுல், நான் கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு வருகிறேன்; நான் பேசவேண்டு மென்று உங்களுக்கு ஆசையிருக்குமானுல் கருப்புச் சட்டை போடும்படி நீங்கள் என்னை வலியுறுத்த முடியாது—என்று சொன்னேன். பிறகு நான் எந்த நாளும் கருப்புச்சட்டை போடவேயில்லை. பின்னர் ஒரு சமயம்—டாக்டர் சுப்பராயன் மந்திரியாக இருந்த காலத்தில், கருப்புச் சட்டைப் படைக்குத் தடை விதித்தபோது, நானே கருப்புச் சட்டைப் போட்டுக்கொண்டு பேசப் போனேன். அந்தச் சட்டைகூட, நம் நெடுஞ்செழியனிடம் இரவல் வாங்கிப்போட்டுக் கொண்டதாகும்.

"அடுத்த நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின்போது, வெறும் உடம்போடு நான் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து, நீடாமங்கலம் தோழர் ஆறுமுகம், பெரியாரவர்களிடம், 'பார்த்தீர்களா ஐயா, அண்ணுதுரை கருப்புச் சட்டை போட்டுக்கொள்ளாமலிருப்பதை' என்ருர்; அதற்குப் பெரியார் என்ன சொன்ஞர் தெரியுமா? 'உடம்பேதான் கருப்பாயிருக்கிறதே; இன்னும் கருபபுச் சட்டை எதற்குப் போடவேண்டும்?—என்று கேட்டார். இதை எதற்குச் சொல்லுகிறேன் என்ருல், பெரியார், தனக்குத் தேவை என்று கருதுகிறபோதெல்லாம், அவர் செய்கிற வாதத்தைப்போல் எந்த வகிலுக்கும் செய்யமுடியாது; அந்த அளவுக்குத் திறமையுடன் தனது வாதத்தை நிலைநிறுத்துவார். ஜனநாயகப் பாதை அவருககுத் தெரியாததல்ல—நனருகத் தெரியும!

"ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டபிறகு, அந்தத் தோல்வியிலே அடைந்த பீதிதான் பெரியாரவர்களுக்கு, இன்னமும் தேர்தல் எனருல் பிடிககவில்லை. பெரியாரைபபோல், காலஞ்சென்ற சௌந்தர பாண்டியனவர்களும் தேர்தலைப் பற்றிய பீதிகொண்டிருந்தார்கள். 'தெனலிராமன் பூனைக்குப் பால வைத்ததுபோல' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். தெனலிராமன் கொதிக்கக் கொதிக்க பாலைக்கொண்டுவந்து பூனைக்குவைத்தாணும்; பாலைக் குடிக்கவந்த பூனைக்கு வாய் சுட்டுவிட்டதால் அன்றுமுதல் அது பால்குடிக்கவே பயப்படுமாம். அதேபோல, தேர்தலிலே ஜஸ்டிஸ் கட்சி பட்ட அல்லல், இந்த இருவரையும் தேர்தல் என்ருல் அஞ்சும்படிச் செய்துவிட்டது; நானும் தேர்தல் என்ருல் பயந்து ஓடியவன்தான்.

"தேர்தலைக்கண்டு அஞ்சிக்கொண்டே இருந்தால் என்ன ஆவது என்ற எண்ணத்தில்தான் பிறகு, 'தேர்தலில் நின்றுதான் பார்ப்போமே' என்று கருதி, தேர்தலில் நாம் நின்ருேம். 'டி. டி. கே.-யை சாமானியர்களாகிய நாம் எதிர்க்க முடியுமா?'—என்று தூரத்தில் ஓடிவிட்டால் என்ன ஆகும்? நாம் துணிந்து நின்ருேம்; டி. டி. கே. பயப்படக்கூடிய அளவுக்கு நம் சக்தி பயன்பட்டது. நம் ஆசைத்தம்பி வெற்றி பெற்ருரே, எப்படிப்பட்டவரை தோற்கடித்து வெற்றி பெற்ருர்? வெங்கடசாமி நாயுடு சாமானியரா? 'வெங்கடசாமி நாயுடுவை நாம் எதிர்க்கமுடியுமா?' என்று பயந்திருந்தால், ஆசைத்தம்பி சட்டசபைக்கு வந்திருக்கமுடியுமா?

"பல எதிர்ப்புக்களிடையே—பெரியாரின் எதிர்ப்பையும்கூடப் பெற்ற-நாம் 15 பேர் சட்டசபைக்குப் போகமுடிந்தது; 15 பேர் வெற்றிபெற்றது அல்ப வெற்றிதான் என்ருலும், 17 இலட்சம் வாக்குகளை நாம் பெற்றிருக்கிருேம். பெரியார் மட்டும் கொஞ்ச ஆதரவைக் காட்டியிருந்தால்—நாம் 50 பேர் சட்டசபைக்கு வந்திருக்க முடியும். 50 பேர் வந்திருந்தால் காங்கிரஸ்காரர்கள் இந்த அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்க முடியாது. 'மகன் செத்தாலும் பரவாயில்லை; மருமகள் தாலியறுந்தால் போதும்' என்று கருதும் கொடுமைக்கார மாமியாரைப்போல, அண்ணுதுரை மூக்கறுக்கப்பட வேண்டுமென்று பெரியார் கருதினுர்; ஆனுலும், நான் மூக்கறுபடவில்லை. நான் பெறுகின்ற பெருமையும் சிறுமையும் பெரியாரைத்தான் சேருமே தவிர, என்னைச் சார்ந்ததல்ல.

"என் கொள்கை பிடிக்கவில்லை—என்னை வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள் மக்கள் என்ருல், அது என் தப்பல்ல; என் பள்ளிக்கூடத்தின் தப்பு எனச் சொல்லுவேன். நான் பயின்ற பெரியார் பள்ளிக்கூடம் எனக்குச் சொல்லித் தந்த பாடத்தின்படிதான் நான் நடப்பேன்.

"இனி நாம், ஜனநாயகப் பயனை அடையும்படியான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களிடம் காட்டுகின்ற பகையை விட்டொழித்து, உருப்படியாக—முறையாக காரியங்களைச் செய்யவேண்டும். காங்கிரசார் ஆணவத்துடன் பேசுவதை அடக்க வேண்டுமென்ருல், ஜனநாவக் பாதையில்தான் நாம்பேசவேண்டும. இதற்குச் சட்டசபை செல்லும் திட்டத்தை பெரியார் அவர்கள் ஒத்துககொண்டு அடுத்த தேர்தலிலே ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"அப்படி திராவிடர் கழகம் தேர்தலில் ஈடுபடுமாஞல், தி. மு. கழகம் எந்தெந்த வகையிலே உதவ முடியுமோ அந்த உதவிகளை யெல்லாம் தாராளமாகத் தரும் என்பதை உள்ளத் தூய்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"அந்த நிலைமை ஏற்பட்டு, சட்டசபையிலே 15 பேராக இருக்கும் நம்மவர்கள் 100 பேராக அடுத்தத் தேர்தலிலே வந்தால் நேரு இப்படியெல்லாம் பேசமாட்டார். நாமே நேருவை வரவழைத்துப் பேசச் சொன்னுலும் அவருக்குப் பேச நாக்கு எழாது. 'காட்டுமிராண்டிகள்' என்று சொன்ன நேருவுக்கு 'காட்டுமிராண்டி'களான நாங்கள் கோட்டையிலே உட்கார்ந்துவிட்டோம் என்பதைக் காட்டவேண்டும். அந்தப் பாதைதான் சரி என்று திராவிடர் கழகம் ஒப்புக்கொண்டு ஈடுபடவேண்டும். அதற்கான யோசனைகளை சொன்னுல் நான் கேட்கத் தயாராயிருக்கிறேன்.

"சட்டசபை சென்று நான் பேசிய பிறகுதான், 'பெரியாரை நீங்கள் போய்ப் பார்த்து சமரசம் செய்யுங்கள்' என்று அமைச்சர் என்னைக் கேட்டார்; 'நான் பெரியாரைச் சந்திக்கவும் தயார்; அதுவரை சட்டத்தை நிறுத்திவையுங்கள்' என்றேன்; ஆனுல் அதை நிறுத்திவைக்க அவர்களுக்கு வக்கு வழியில்லை. 'நான் பெரியாரைச் சந்திக்கிறேன்' என்று சொல்லிய போது, பெரியார் நம்மை எவ்வளவுதான் இழித்துரைத்திருந்தபோதிலும், நிந்தித்திருந்தபோதிலும், அதைப்பற்றி யெல்லாம் நான் கவலைப்படவில்லை; ஏனென்ருல், சின்ன வயதிலிருந்தே நிந்தனைகளுக்கிடையே நான் வளர்ந்தவன்; 'நிந்தனைகளைத் தாங்கிக்கொள்ளவேண்டும்' என்பதையும் பெரியாரே எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிருர்! பெரியார் என்னைத் திட்டினுலும் அதற்கு அர்த்தமில்லை. பதிலுக்குப் புகழ்மாலையைத்தான் பெரியாருக்குச் சூட்டுவேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஜனநாயகப் பாதைக்கு வருமாறு பெரியார் அவர்களை அழைக்கிறேன்."

நிலநடுக்கத்திற்கு 1,287 பேர் பலி!

தெஹ்ரான், டிச. 16—ஈரான் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக 1,287 பேர் இறந்துவிட்டனர் என்று மதிப்பிடப்பட்டுஇளது.

மலாயா சென்று திரும்பிய

பொன்னம்பலனுருக்கு

வரவேற்பு

இரா. நெடுஞ்செழியன்

கலந்து கொள்வார்.

17—12—57 செவ்வாய் மாலை 6-மணிக்கு, சென்னை—ஏழு கிணறு தெருவில் (முருகன் டாக்கீஸ் அருகில்) மேற்படி வரவேற்புக் கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. எஸ். இராமன் அவர்கள் தலைமை வகிப்பார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழர் சேலம் சீனிவாசன் இன்னிசை வழங்குவார்.

மஜீத் நினைவு நூல்நிலையத் திறப்பு விழா

சென்னை 31-வது வட்டம் புதுப்பேட்டையில் மேற்படி விழா 16—12—57 மாலை 6-30 மணிக்கு (எழும்பூர் கண் ஆஸ்பத்திரி அருகில்) சியாளி முதலி தெருவில் நடைபெறும். தோழர் வி இளஞ்சேரலாதன் தலைமையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், ஆர் எஸ். பாண்டியன், எம். எஸ். அப்துல் காதர், கருமுகில் ஆகியோர் பேசுவர்.

★★

கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு

கோ-ஆப்டெக்ஸ்

16-12-57 முதல் 15-1-58 முடிய

4 சதவிகிதம் பிரத்தியேக தள்ளுபடி

★

இந்தியா முழுவதிலும் உள்ள எங்கள் 286 விற்பனை நிலையங்களிலும் இந்த சலுகை உண்டு. அன்னியில் ஆறு நயாபைசா "செஸ் ரிபேட்" உண்டு.

★

சென்னை இராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.

34/1-ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.

★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெறறு, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.